ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2017 மாச்சு 15 |

## இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் அளவீடு – 2017 பெப்புருவரி

- **தயாரிப்புத் துறை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்** பெப்புருவரியில் 57.1 கொண்ட சுட்டெண் புள்ளிகளை பதிவு செய்ததுடன் இது 2017 சனவரியுடன் ஒப்பிடும் போது 0.9 சுட்டெண் புள்ளிகள் அதிகரிப்பை காட்டியது. இது, புதிய கட்டளைகள் துணைச் சுட்டெண்ணில் பிரதிபலிக்கப்பட்டவாறு வருகின்ற புத்தாண்டுகால பருவத்திற்கான அதிகரிக்கும் கட்டளைகள் பெரிதும் காரணமாக இருந்ததோடு பெப்புருவரி 2017ல் தயாரிப்பு நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக விரிவாக்கத்தினை குறித்துக்காட்டியது. நீடிக்கும் நிரம்பலர் வழங்கல் நேரத்தில் பிரதிபலிக்கப்பட்டவாறு சனவரி மாதத்தில் சேர்த்துக்கொள்ளப்பபட்ட இருப்புகளின் பாவனை மற்றும் மூலப்பொருள் விநியோகத்தில் ஏற்பட்ட தாமதங்கள் கொள்வனவுகள் இருப்பு துணைச் சுட்டெண் பெப்புருவரியில் குறைவடைந்தமைக்கு காரணமாக அமைந்தது. தொழில்நிலைச் துணைச் சுட்டெண் அதிகரித்திருந்த வேளையில் உற்பத்தி துணைச்சுட்டெண் மாற்றமடையாமல் காணப்பட்டது. பெப்ரவரி மாதத்தில் காணப்பட்ட குறைந்த வேலைநாட்கள் அதிகரிக்கும் கேள்விகளுக்கு ஏற்ற வகையில் உற்பத்தியினை அதிகரிப்பதற்கு ஒரு தடையாக காணப்பட்டது. ஒட்டுமொத்த தரவுப்புள்ளிகள் விரிவாக்கமொன்றினைக் கொண்டிருந்தவிடத்து மற்றைய அனைத்து துணைச் சுட்டெண்களும் 50.0 அடிமட்டத்திற்கு மேலேயே காணப்பட்டன. நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்புக்கள் அடுத்த மூன்று மாதங்களுக்காக மேம்பாடுடொன்றினைக் காட்டின.

- **பணிகள் துறை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்** 2017 சனவரியின் 57.5 சுட்டெண் புள்ளியிலிருந்து பெப்புருவரியில் 57.3 சுட்டெண் புள்ளிகளைப் பதிவுசெய்தது. கடந்த மாதத்தின் பெறுமதியிலும் பார்க்க கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணில் ஏற்பட்ட வீழ்ச்சியானது, பணிகள் துறையின் பொருளாதார நடவடிக்கைகள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2017 பெப்புருவரியில் மெதுவான வேகத்தில் விரிவடைந்தமையினை எடுத்துக்காட்டியது. பணிகள் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு வியாபார நடவடிக்கை துணைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட வீழ்ச்சியும் நிலுவையிலுள்ள பணிகள் துணைச்சுட்டெண்ணில் ஏற்பட்ட வீழ்ச்சியும் காரணங்களாகின. புதிய வியாபாரங்கள், தொழில்நிலைச் சுட்டெண் மற்றும் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்புக்கள் துணைச் சுட்டெண் 2017 சனவரியுடன் ஒப்பிடுகையில் 2017 பெப்புருவரியில் அதிகரித்தது. கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணின் தொகுப்பு செயன்முறையில் பரிசீலனைக்கெடுக்கப்படாத விதிக்கப்பட்ட விலைகள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2017 பெப்புருவரியில் குறைவடைந்தது. தொழிலாளர் செலவிற்கான எதிர்பார்ப்புக்கள் சுட்டெண் மூலம் அளவிடப்படும் எதிர்கால தொழிலாளர் செலவு 2017 பெப்புருவரியில் அதிகரித்தது.

| | ஆ/மா | சன | பெப் | மாச் | ஏப் | மே | யூன் | யூலை | ஓகத் | செத் | ஒத் | நவெ | திசெ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், தயாரிப்பு | 2015 | வி.கி | வி.கி | வி.கி | வி.கி | 67.3 | 57.5 | 55.5 | 56.5 | 53.2 | 57.8 | 54.8 | 57.9 |
| | 2016 | 51.9 | 55.3 | 60.7 | 41.6 | 47.9 | 55.1 | 50.6 | 53.5 | 57.7 | 56.5 | 58.4 | 58.3 |
| | 2017 | 56.2 | 57.1 | | | | | | | | | | |
| கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், பணிகள் | 2015 | வி.கி | வி.கி | வி.கி | வி.கி | 66.8 | 65.0 | 60.6 | 59.8 | 61.7 | 59.5 | 59.3 | 60.2 |
| | 2016 | 58.0 | 59.3 | 61.6 | 54.7 | 58.1 | 56.3 | 57.8 | 61.2 | 57.7 | 59.3 | 59.7 | 59.8 |
| | 2017 | 57.5 | 57.3 | | | | | | | | | | |

## கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் தயாரிப்பு




## கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் பணிகள்



**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.

கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.

கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.